20th April 1959]

SRI K. SATTANATHA KARAYALAR : சில ஜில்லாக்களில் சுமார் 40 சதமானம் உள்ள வழக்குகள் முடிவாகாமல் தீர்ப்பு அளிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் என்ன ? இந்தக் காலதாமதத்தைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சில கேஸ்கள் சிக்கலாக இருக்கும். அவைகளைப் பைசல் செய்வதில் காலதாமதம் ஏற்படலாம்.

Industries in the public sector

* 4 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the industries in the public sector that are at a stand-still for want of industrial capital goods?

THE HON. SRI R. VENKATARAMAN : (1) Glass Apparatus Factory, Guindy.

(2) Service Centre for the manufacture of Surgical Instruments, Guindy.

(3) Service Centre for the manufacture of Electrical Goods, Guindy.

(4) Factory for the manufacture of essential Handloom Parts, Salem.

(5) Wool Processing Centre, Vinnamangalam.

(6) Central Workshop for the manufacture of iron parts for assembling Ambar Charka sets.

SRI K. SATTANATHA KARAYALAR : முக்கியமான சாமான்கள் தருவிப்பதில் வெளிநாட்டுச் செலாவணி இல்லாதது காரணமா அல்லது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்படாமல் இருந்ததன் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது இவைகளுக்கு ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறோம்.

THE HON. SRI R. VENKATARAMAN : சில தொழிற்சாலைகளுக்கு போதிய யந்திரங்கள் வெளி நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிவிட்டது. அவைகள் இன்னும் வந்து சேரவில்லை. மூன்று தொழிற்சாலைகளுக்கு வேண்டிய யந்திரங்களுக்கு வேண்டிய அந்நிய செலாவணி இல்லாததன் காரணத்தால் அது தடைப்பட்டு நிற்கிறது. அந்நியச் செலாவணி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எவ்வளவு இருக்கும் என்று எதிர்பார்த்ததோ அந்த அளவுக்கு இல்லாமல் இருக்கிறது. அதைவிடக் குறைவாக இருக்கிறது என்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும்.

SRI P. S. CHINNADURAI : அம்பர் சர்க்கா உற்பத்தி செய்வதற்கு உரிய பண்டங்களுக்குக்கூட வெளி நாட்டை எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறதா ? நம்முடைய நாட்டினுடைய சாதனங்களைக் கொண்டு அவைகளைத் தயாரிக்க முடியும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

[20th April 1959.

The Hon. Sri R. VENKATARAMAN : அம்பர் சர்க்காவிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் அநேகமாக இங்கேயே செய்கிறோம். யந்திரங்களுக்கு வேண்டிய ஒரே ஒரு பார்ட் மட்டும் வெளி நாட்டிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. அது வந்தால் அனேகமாக அதிகப்படியான எண்ணிக்கை செய்ய முடியும். அதன் பிறகு வெளி நாட்டு உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லை.

The Hon. Sri C. SUBRAMANIAM : All parts are manufactured here. The machine required for manufacturing parts is wanted.

Sri K. SATTANATHA KARAYALAR : சில பொருள்கள் தருவிப்பதில் சில சிக்கல்கள் இருக்கிறது என்ற அடிப்படையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சில திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்று தோன்றுகிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருக்கு நம்பிக்கை இல்லாமல் இருப்பதுபோல் எங்களுக்கு இல்லை. போடக் கூடிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. சாதாரணமாக நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

Sri T. KARIA GOUNDER : 'வுல் ப்ராசசை' விண்ணமங்கலத்தில் எப்பொழுது ஆரம்பிக்கப் போகிறார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : அதற்கு வெளி நாட்டிலிருந்து யந்திரங்கள் வரவேண்டியதாக இருக்கிறது. அதற்கான வேலைகளும் இன்னும் சாங்ஷன் ஆகவில்லை.

Sri A. VEDARATHNAM : அம்பர் சர்க்காவைச் செய்வதற்கு ஒரு பார்ட் மாத்திரம் வெளிநாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொன்னார். அந்தப் பார்ட்டை இங்கேயே தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அந்தப் பார்ட்டை செய்வதற்கான யந்திரங்களை இங்கே வரவழைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : பால்பேரிங் போன்ற முக்கியமான சாமான்கள் வெளிநாட்டிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. கியர் வீல் முதலியவைகள் கூட வரவேண்டியதாக இருக்கிறது. அவைகளை இங்கே செய்ய முடியாது. அவைகளை வரவழைத்தால் அதிகப்படியாக அம்பர் சர்க்காவை இங்கே தயாரிக்க முடியும். அதற்கு வெளி நாட்டு செலவாணியை அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்தி கொண்டிருக்கிறோம்.

Labbai Community

* 5 *Q*.—**Sri M. K. SOMASUNDARAM** (on behalf of **Sri M. S. SELVARAJAN**) : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government propose to include the Labbai Community in the list of " Most Backward Classes "?

The Hon. Sri P. KAKKAN : No, Sir.

Sri S. LAZAR : பொருளாதார ரீதியில் இந்த சமுகத்திற்கு சலுகைகள் வழங்குவதற்கு சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அது எப்பொழுது அமுலுக்கு வரும் ?